
# பாடம் - 1



## 1. தெபோரா

I. **வாசிக்க வேண்டிய இறைவார்த்தை : நீதித்தலைவர்கள் 4:4-24**

II. **நற்பண்புகளின் பட்டியல் : பிறரன்பு, கற்பு, மன்னிப்பு, விடுதலை, இரக்கம் ஆகியவற்றைக் கட்டங்களில் வட்டமிடுக**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ர் | றி | ளம | நு | க | டு | மு | ஆ | ட |
| க | ச | வ | ம | ற் | ப | த | ற | நு |
| பி | ற | ர | ன் | பு | ம | க | மு | சு |
| கெ | ளக | ட | னி | லூ | கச | ய | யள | சவ |
| க | து | ளு | ப் | இ | ர | க் | க | ம் |
| ந | வு | ய | பு | வி | டு | த | லை | ட |

III. **பொருத்துக**

1. யாவேல் - தீர்ப்பு
2. நீதித்தலைவர்கள் - கூடாரம்
3. தெபோராப் பேரிச்சை - பாராக்
4. சீசரா - தெபோரா
5. நீர் என்னுடன் வர வேண்டாம் - படைத்தலைவன்

IV. **சரியான பதிலை எழுதுங்கள்**

1. இறைவாக்கினர் தெபோரா பாராக்கிடம் நப்தலி, செபுலோன் மக்களை எங்கு ஒன்று கூட்டச் சொன்னார்?
2. பாராக்கைப் பின்தொடர்ந்தவர்கள் எத்தனை பேர்?
3. சீசராவிடம் இருந்த இரும்புத்தேர்கள் எத்தனை?
4. யாவேல் யாருடைய கூடாரத்திற்கு ஓடினார்?
5. ஆண்டவர் ஒரு பெண்ணிடம் சீசராவை ஒப்படைப்பார் என்றவர் யார்?

V. **மனப்பாடம் : நீதித்தலைவர்கள் 4:7-10**

## பாடம் - 2




# 2. அன்னா - இறைவேண்டலின் முன்மாதிரி

**I.** **வாசிக்க வேண்டிய இறைவார்த்தை : 1 சாமுவேல் 1:9- 28**

**II.** **குறுகிய விடையளி**

1. அன்னா யாரால் குடிகாரி என்று கருதப்பட்டார்?
2. அன்னா தன் மகனுக்குச் சூட்டிய பெயர் என்ன?
3. சாமுவேலின் தந்தையின் பெயர் என்ன?
4. அன்னா தம் குழந்தையின் தலைமேல் எது படாது என்றார்?
5. அன்னா ஆண்டவர் திருமுன் கொட்டிக் கொண்டிருந்தது எதை?

**III.** **குறுக்கெழுத்துப் புதிர்**




1. அன்னாவின் கணவரின் பெயர் என்ன? ( இடமிருந்து வலம் )
2. சாமுவேலின் தாயின் பெயர் என்ன? ( மேலிருந்து கீழ் )
3. எல்கானாவின் இரு மனைவிகளுள் ஒருவர்? ( கீழிருந்து மேல் )

**IV.** **இப்பாடத்தில் வழங்கப்படும் இறைச்செய்திகளை எழுதுக**

1.
2.
3.

**V.** **நீங்கள் இறைவேண்டல் செய்து கிடைத்த மூன்று புதுமைகளைப் பகிரலாம்.**

1.
2.
3.

**VI.** **மனப்பாடம் : 1 சாமுவேல் 2:1- 2**

## பாடம் - 3



# 3. எஸ்தர் - புதுவாழ்வுக்கு வித்திட்டவர்

**I.** **வாசிக்க வேண்டிய இறைவார்த்தை : எஸ்தர் 7: 1- 10**

**II.** **குறுகிய விடையளி**

1. எஸ்தரின் விருந்துக்குச் சென்றவர்கள் யார்?
2. மன்னருக்கு உண்டாகும் இழப்பிற்கு யாரால் ஈடு செய்ய முடியாது, என்று எஸ்தர் கூறினார்?
3. மன்னர் எஸ்தருக்குக் கொடுத்த வாக்குறுதி யாது?
4. ஆமானின் முகத்தை மூடியது யார்?
5. ஆமான் எப்படிக் கொல்லப்பட்டார்?

**III.** **இறைவசனத்தைக் குறிப்பிடவும்: (அதிகாரம் : வசனம் )**

1. “ எஸ்தர் அரசியே உன் விண்ணப்பம் யாது? அது உனக்கு அளிக்கப்படும்.”
2. “ தனக்குத் தீங்கிழைக்க மன்னர் முடிவு செய்துவிட்டார் என்று கண்ட ஆமான் அரசி எஸ்தரிடம் தன் உயிருக்காய் மன்றாட எண்ணிப் பின்தங்கினான்.”
3. “அதிலேயே அவனைத் தூக்கிலிடுங்கள் என்றார்.”
4. “ ஆமான் மன்னருக்கும் எஸ்தருக்கும் முன்பாகப் பேரச்சம் கொண்டான்.”
5. “ என் மாளிகையில் நான் இருக்கும்போதே, இவன் அரசியைக் கெடுப்பானோ.”

**IV.** **சிறப்பு செயல்பாடு**

உனக்குத் தெரிந்த வீரப் பெண்களை குறிப்பிடுக.

1. ..........................................
2. ..........................................
3. ..........................................
4. ..........................................
5. ..........................................

**V.** **மனப்பாடம் : எஸ்தர் 7:3-6**

## பாடம் - 4



# 4. யூதித்து - விடுதலை அளித்த புதுமை பெண்

**I. வாசிக்க வேண்டிய இறைவார்த்தை : யூதித்து 13: 14- 20**

**II. குறுகிய விடையளி**

1. இஸ்ரயேல் மக்கள் யாருடைய அடிமைத்தனத்தில் இருந்தனர்?
2. " மகளே, உலகில் உள்ள எல்லாப் பெண்களையும்விட நீ உன்னத கடவுளின் ஆசி பெற்றவள், அவரே உன்னை வழிநடத்தினார்" என்று யார் யாரிடம் கூறியது?
3. இஸ்ரயேலை அடிமைப்படுத்திய படைத்தலைவன் யார்? அவன் எந்த அரசருக்குப் பணிபுரிந்தான்?
4. யூதித்து ஒலோபெரினை அழிக்க எவையெல்லாம் அவருக்கு துணையாக இருந்தன?
5. பிறரை அடிமைப்படுத்துவது சரியா? தவறா? தவறு எனில் ஏன்?

**III. இறைவசனத்தைக் குறிப்பிடவும்: (அதிகாரம் : வசனம்)**

1. "இதோ, அசீரியப் படைத்தலைவன் ஒலோபெரினின் தலை! இதோ, மேற்கவிகை!"
2. "எங்கள் கடவுளே போற்றி! நீரே இன்று உம் மக்களின் பகைவர்களை அழித்தொழித்தீர்."
3. "நம் மக்களினத்தார் ஒடுக்கப்பட்டபோது நீ உன் உயிரைப் பணயம் வைத்தாய்."


**IV. சிறப்புச் செயல்பாடு**

இவ்வுலகத்தில் சமூக மாற்றத்திற்காகவும் மக்கள் முன்னேற்றத்திற்காகவும் போராடிய, பெண்களின் பெயர்களை எழுதவும்.

1. ..........................................
2. ..........................................
3. ..........................................
4. ..........................................
5. ..........................................

**V. மனப்பாடம் : யூதித்து 13:14; 16-17**

## பாடம் - 5



# 5. சூசன்னா - ஒழுக்கத்தின் துலாக்கோல்

**I. வாசிக்க வேண்டிய இறைவார்த்தை : தானியேல் (இ) 2:42- 64**

**II. பயிற்சி வினாக்கள்**

1. சூசன்னா யார்? அவர் எப்படிப்பட்டவர்?
2. சூசன்னாவை விடுவிக்க தானியேல் எடுத்த நிலைப்பாடு என்ன?
3. விமர்சனங்களுக்கு உள்ளாகும் பெண்களின் சார்பாக நீ எடுக்கும் நிலைப்பாடு என்ன?
4. பெண்களின் பாதுகாப்பிற்கு உனது பரிந்துரைகள் என்ன?
5. சூசன்னாவின் உள்ளம் யாரை நம்பி இருந்தது?


**III. சூசன்னா மற்றும் தானியேலிடம் காணப்பட்ட நற்பண்புகளைப் பட்டியலிடுக**

1. ...................................................................................................
2. ...................................................................................................
3. ...................................................................................................
4. ...................................................................................................
5. ...................................................................................................

**IV. தானியேலின் தீர்ப்புப் பகுதியை : (2:42 - 64) நாடக வடிவில் எடுத்தெழுதவும்**

**V. மனப்பாடம் : தானியேல் (இ) 2:42-43**

## பாடம் - 6



# 6. ஏழு மகன்களின் தாய் - நம்பிக்கையின் நங்கூரம்

**I. வாசிக்க வேண்டிய இறைவார்த்தை : 2 மக்கபேயர் 7:30-41**

**II. விவிலியக் குறிப்பு தருக**

1. "இளைஞர் ஆண்டவரிடம் முழு நம்பிக்கை கொண்டவராய் மாசற்ற நிலையில் மாண்டார்"
2. "எங்கள் சொந்தப் பாவங்களின் பொருட்டே நாங்கள் துன்புறுகிறோம்"
3. "செறுக்குறாதே உறுதியற்றவற்றை நம்பித் திமிர் கொண்டு துள்ளாதே"
4. "நீ கடவுளின் தண்டனைத் தீர்ப்பால் உன்னுடைய ஆணவத்திற்கு ஏற்ற தண்டனையைப் பெறுவாய்"
5. "சினம் என் வழியாகவும் என் சகோதரர்கள் வழியாகவும் முடிவுக்கு வருமாறும்..."

**III. சரியான விடையை கண்டுபிடித்து ✓செய்க**

- சகோதரர்கள் - 3 4 7 9
- உணவு - கோழி ஆடு கழுதை பன்றி
- தாய் - வீரப்பெண் இழிவானவர் போற்றுதற்குரியவர் கேவலமானவர்
- தாய்மொழி - எபிரேயம் கிரேக்கம் ஆங்கிலம் இலத்தின்

**IV. விளையாட்டு: உங்களுக்குப் பிடித்த நற்பண்பாளராக இந்த ஏழு மகன்களையும் அவருடைய தாயையும் அளித்து மகிழுங்கள். (எ-டு : அன்பானவர், அமைதியானவர்...)**

தாய்:


1. ........................... 2. ........................... 3. ........................... 4. ...........................

5. ........................... 6. ........................... 7. ........................... 8. ...........................

**V. வீட்டு வேலை: இன்றைய இறைவார்த்தையில் நீ அறிந்து கொண்ட ஏழு மகன்களின் சான்றை ஒவ்வொன்றாக எழுதிவரவும்.**

**V. மனப்பாடம் : 2 மக்கபேயர் 7:14**

## பாடம் - 7



# 7. சமாரியப் பெண்ணின் நம்பிக்கை

**I. வாசிக்க வேண்டிய இறைவார்த்தை : யோவான் 4:6-15, 39-42**

**II. குறுகிய விடையளி**

1. இயேசு எந்த ஊரில் சமாரியப் பெண்ணைச் சந்தித்தார்?
2. சமாரியாவில் இருந்த கிணறு யாருடையது?
3. சமாரியப் பெண்ணின் நம்பிக்கையைத் திடப்படுத்தியவர் யார்?
4. "உம்மோடு பேசும் நானே அவர்" என்ற இயேசுவின் கூற்றில் "அவர்" என்பது யாரைக் குறிக்கிறது?
5. சமாரியப்பெண் முதலில் இயேசுவை எவ்வாறு குறிப்பிட்டு அழைத்தார்? இறுதியாக இயேசுவை எவ்வாறு உணர்ந்து கொண்டார்?

**III. இறைவசனத்தை குறிப்பிடவும்: (அதிகாரம் : வசனம்)**


1. "நான் கொடுக்கும் தண்ணீர் அதைக் குடிப்பவருக்குள் பொங்கி எழும் ஊற்றாக மாறி நிலைவாழ்வு அளிக்கும்."
2. "கிறிஸ்து எனப்படும் மெசியா வருவார் என எனக்குத் தொரியும். அவர் வரும்போது அனைத்தையும் எங்களுக்கு அறிவிப்பார்."
3. "நீர் யூதர் நானோ சமாரியப்பெண். நீர் என்னிடம் தண்ணீர் கேட்பது எப்படி?"

**IV. இரண்டு படங்களுக்கும் உள்ள ஏழு வித்தியாசங்களைக் கண்டுப்பிடித்து வட்டமிடவும்**



**V. மனப்பாடம் : யோவான் 4:13- 15**

# பாடம் - 8



# 8. மகதலா மரியா - இயேசுவின் உயிர்ப்புக்கு முதல் சாட்சி

**I. வாசிக்க வேண்டிய இறைவார்த்தை : யோவான் 20:11- 18**

**II. பொருத்துக**

1. வெண்ணாடை - இயேசு
2. மரியா - கண்டேன்
3. தோட்டக்காரர் - போதகர்
4. ரபூனி - அழுகை
5. நான் ஆண்டவரைக் - இரு வானதூதர்

**III கோடிட்ட இடத்தை நிரப்புக : (எழுத்துகள் கலைந்துள்ளன சரிசெய்க)**

1. நான் என் தந்தையிடம் --------------- (னுஇம்ன்) சொல்லவில்லை.
2. இந்த ------------ (யரேஎபிச்) சொல்லுக்கு போதகரே என்பது பொருள்.
3. நான் அவரை -------------- (டுத்துச்எ) செல்வேன்.
4. ஏன் அம்மா அழுகிறாய்? யாரைத் ------------ (கிய்தேறாடு).
5. இயேசு --------------- (க்பற்தைநி) கண்டார்.

**IV. சரியான வார்த்தையை ✓ செய்க**

1. மரியா கல்லறைக்குள் எப்படிப் பார்த்தார்
   அ) தேடி ஆ) ஓடி இ) குனிந்து
2. அவரை எங்கே
   அ) வைத்தனரோ ஆ) போட்டனரோ இ) அடக்கினரோ
3. இயேசு இப்படிச் செய்யாதே என மரியாவிடம் கூறியது
   அ) தொற்றிக்கொள்ளாதே ஆ) சுற்றிக்கொள்ளாதே இ) பற்றிக்கொள்ளாதே
4. மரியா கல்லறைக்கு வெளியே செய்தது
   அ) தேடியது ஆ) பாடியது இ) அழுதது
5. மரியா இயேசுவை அழைத்தது
   அ) குருவே ஆ) ஐயா இ) தலைவா

**V. மனப்பாடம் : யோவான் 20:16-18**

## பாடம் - 9



# 9. தொடக்கக்காலத் திரு அவையின் பெண்கள்

I. **வாசிக்க வேண்டிய இறைவார்த்தை : திருத்தூதர் பணிகள் 16:11-15; உரோமையர் 16:1-15**

II. **குறுகிய விடையளிக்கவும்**

1. ஆசியாவில் கிறிஸ்துவை முதன்முதலில் ஏற்றுக்கொண்டது யார்?
2. தகைமை வாய்ந்த கிறிஸ்தவர் யார்?
3. பவுலும் வேறு யாரும் ஒரே அன்னையின் பிள்ளைகள் போன்றவர்கள்?
4. பவுலுக்கு முன் கிறிஸ்தவர்கள் ஆனவர்கள் யார் யார்?
5. பலருக்கு உதவி செய்தவர் யார்?

III. **விவிலியக் குறிப்பு எழுதுக: விடை மாறியுள்ளது சரியாக வரிசைப்படுத்தி எழுதுக:**

1. "என் வீட்டுக்கு வந்து தங்குங்கள்"
2. "செந்நிற ஆடைகளை விற்பவரான அவர் கடவுளை வழிபட்டு வந்தார்"
3. "மாசித்தோனியப் பகுதியின் முக்கிய நகரான பிலிப்பி சென்றோம்"
4. "பிற இனத்துத் திரு அவைகள் அனைத்துமே நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றன"
5. "திருத்தூதர்களுள் இவர்கள் பெயர் பெற்றவர்கள்"

IV. **கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. செந்நிற ஆடைகளை விற்பவர் .................................
2. ................................. நகரைச் சேர்ந்த பெண் ஒருவர்.
3. மறுநாள் சென்ற ஊர் .................................
4. அவர்கள் வீட்டில் கூடும் .................................க்கும் வாழ்த்துச் சொல்லுங்கள்.
5. உங்களுக்காகப் பாடுபட்டு உழைத்த .................................க்கு வாழ்த்துத் தெரிவியுங்கள்.

V. **மனப்பாடம் : திருத்தூதர் பணிகள் 16:14-15**

# வருகைப் பதிவேடு

*தயாரிப்பு & வெளியீடு :* **தமிழக விவிலியப் பணிக்குழு, முப்பணி மையம், திண்டிவனம் - 604 001.**

இரண்டாம் ஆண்டு (B)

# விடுமுறை


# விவிலியப் பள்ளி

**மாணவர் பயிற்சி ஏடு**

**நான்காம் குழு – முது நிலை (IX, X, XI வகுப்புகள்)**

# மாற்றம் கொணர்ந்த விவிலியப் பெண்கள்





பெயர் : ..................................

முகவரி : ..................................

..................................

..................................